## தொங்கும் புழு, பறக்கும் பூச்சி, படபடக்கும் கரன்சி - இனிக்குது இயற்கை

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன் சத்திரம் அருகே இருக்கும் அரண்மனைவலசு என்னும் குட்டி கிராமத்திலிருக்கும் குப்புசாமி (அலைபேசி : 98426 73274) இயற்கை விவசாயம் செய்கிறார். ரசாயன உரம், களைக்கொல்லி, பூச்சிக்கொல்லி எல்லாம் போட்டுத்தான் நானும் விவசாயம் செய்துகிட்டிருந்தேன். பத்து வருஷத்துக்கு முன்னாடி ஆறு ஏக்கர்ல நிலக்கடலை போட்டிருந்தேன். கடலையில் ஒட்டுப்புழு தாக்குதல் அதிகமா இருக்கும். அப்படி புழு தாக்குற பருவமா பார்த்து எனக்கு ஒரு அவசர வேலை. வெளியூர்ல தங்க வேண்டியதாயிருச்சி. ஊருக்குத் திரும்பி வந்தப்ப, செடியெல்லாம் ஒரே புழு. அந்த நேரம் பார்த்து கையில காசு வேற இல்ல.

கடன் வாங்கவும் யோசனை. அதனால மருந்து அடிக்க முடியல. 'புழு முத்திப்போச்சு, இனி மருந்தடிச்சு பிரயோசனமில்லைன்னு அக்கம் பக்கத்து சம்சாரிகளும் சொல்லிட்டாங்க. கடலை விளைஞ்சா விளையட்டும், இல்லாட்டி அப்படியே மண்ணு திங்கட்டுன்னு எந்த மருந்தும் அடிக்காம விட்டுட்டேன். தண்ணி மட்டும் ஒழுங்கா காட்டிக்கிட்டிருந்தேன். அதே சமயம், பக்கத்து தோட்டங்கள்ல ஒட்டுப்புழு தாக்குற பருவம் முடிஞ்சி, அடுத்த நோவு தாக்கி. அதக்கு மருந்து கொடுத்துகிட்டிருந்தாங்க. ஆனா, என்னோட கடலைக்கு மட்டும் எந்த நோவும் வரலை. அறுவடை சமயத்துல பார்த்தா, மத்தவங்களைக் காட்டிலும் கூடுதலாகவே எனக்கு மகசூல் கிடைச்சிச்சி. ஆகா அற்புதமான உண்மையைக் கண்டுபிடிச்சிட்டோமேன்னு ரசாயனத்தையெல்லாம் மூட்டைக்கட்டி வெச்சிட்டேன்.

அடுத்த வெள்ளாமையப்ப களைக் கொல்லியை எதுக்கு அடிக்கணும் : அதையும் விட்டு பாக்கலாமேன்னு முடிவெடுத்தேன். அந்தத் தடவையும் நல்ல விளைச்சல். அதிலிருந்து களைக்கொல்லி அடிக்கிறதையும் விட்டுட்டேன். முழுக்க இயற்கை விவசாயம் தான். மண்ணுக்கு ஊட்டமேத்தறதுக்கு சாணம் மட்டும் தொடர்ந்து கொடுக்குறேன். மத்த எந்த உரமும் கிடையாது. இந்த முறையில சாகுபடி செய்தா, வீரிய இரக விதை ஒழுங்கா விளையமாட்டேங்குது. நாட்டு இரகம் மட்டும் நல்லா வர்றதால, எப்பவுமே நாட்டு இரகம் தான் போடுறேன். நாட்டு வகைக்கு எப்பவுமே நல்ல விலை கிடைக்கும். அதில்லாம என்னோட தோட்டத்துக் காய் எப்பவுமே அளவுக் கொஞ்சம் பெரிசா இருக்குறதால கூடுதல் விலை கிடைக்குது. அணில் கடிச்ச கொய்யாப்பழம் ருசிக்கும்ன்னு சொல்ற மாதிரி, பல பூச்சிங்க தின்னப் பயிர் தான் என் தோட்டத்துல இருக்கு. இதுக்கு நல்ல மணம், பளபளப்பு, சதைப்பற்று, ருசி எல்லாமே இருக்கு என்றார். மொத்தம் பதினஞ்சு ஏக்கர்ல விவசாயம் செய்யறேன். மூணு ஏக்கர்ல மட்டும் பந்தல், நாட்டுக் குட்டைப் புடலை, நாட்டு பீர்க்கன் போட்டிருக்கேன்.பூச்சிகளைக் கட்டுப்படுத்தறதுக்காக பெரிசா மெனக்கெட வேண்டிதில்லை. தோட்டத்தில பத்து பதினஞ்சு நாட்டுக் கோழியை வாங்கிவிட்டா போதும்.

புழு, பூச்சியை அதுக பிடிச்சு தின்னுப்புடும். கோழிக்கு நாம இரை போட வேண்டியதில்லை. தானாவே வளந்துடும். அப்படியும் தப்பிக்கிற பூச்சிகளை காக்கா, கொக்கு, குருவி எல்லாம் சாப்பிட்டுக்கும். வேற மருந்தே தேவையில்ல.. நோவு தாக்கிக் கருகினாலும்.. அப்படியே விட்டுட்டா, தானா நோவு சரியாயிடுது. களையைக் கொல்ற மருந்து, கட்டாயம் நாம வேளாண்மை பண்ணியிருக்கிற செடியையும் பாதிக்கத்தானே செய்யும். அதனாலயே நான் தோட்டத்துல களையெடுக்கறதே இல்லை. முழங்காலுக்கு மேல வளந்து நின்னா, காய் எடுக்குறப்ப கஷ்டமா இருக்கும். அதனால ரொம்ப வளந்தா மட்டும் வழிச்சு அப்படியே

தோட்டத்துலேயே போட்டுடுவேன். தண்ணி மட்டும் ஒழுங்கா கட்டுனா போதும். அப்பப்ப பச்சைச் சாணியை தண்ணியில கலந்து விடணும்.

இப்படி பண்ணுனா முட்டுவளிச் செலவுல முழுகிப்போக, வேண்டிய அவசியமே இருக்காது. காடு நம்ம காடு.. இலவச மின்சாரத்துல தண்ணி.. எடுத்து வெச்ச நாட்டு விதை.. மத்தபடி வேற செலவே கிடையாது. விளைஞ்ச வரைக்கும் லாபம் தான். அறுப்புக்கூலி, போக்குவரத்து, சுங்கம், கமிஷன்னு இது தான் செலவு. ரெண்டு ஏக்கர்ல தோட்டத்துக்காரங்களே ரெண்டு பேர் ஒழுங்கா வேலை பாத்தா, கண்டிப்பா காய்கறியில வருஷத்துக்கு மூணு லட்சத்துக்கு குறையாம சம்பாதிக்கலாம்.

வீட்டுத் தேவைக்குன்னு மிளகாய்,கத்தரி, தக்காளி, முருங்கை எல்லாமே இதே முறையில தான் வெள்ளாமை பண்ணிக்கிறேன். அறுவடையப்போ தேவைப்பட்டா ஒரு ஆளை கூடுதலா வெச்சுக்குவேன். யாரு வேணாலும் எந்நேரமும் என் தோட்டத்தை வந்து பாக்கலாம். எல்லாத்தையும் சொல்லத் தயாரா இருக்கேன் என்ற குப்புசாமி.இதுவரைக்கும் ஏதோ எனக்குத் தெரிஞ்ச முறையில இயற்கை சாகுபடியை பண்ணிக்கிட்டிருக்கேன். இப்ப எல்லாரும் இயற்கை விவசாயத்தைப் பத்தித்தான் பெரிசா சொல்றாங்க. ஜீரோ பட்ஜெட்டுன்னு ஒண்ணு புதுசா வந்திருக்கு. இது எதுவுமே இவ்வளவு நாளாத் தெரியாது. இனிமே தான் கத்துக்கணும் குறிப்பா ஜீரோ பட்ஜெட் சூத்திரத்தை கத்துக்க ஆசை. ஏன்னா, அவங்க சொல்றதும் இயற்கை விவசாயம் தானே.அதைக் கத்துக்கிட்டா, கூடுதல் லாபம் பார்க்கலாமே என்று சொன்னார்.

ரசாயனம் விவசாயம் - இயற்கை விவசாயம்
வரவு - செலவு ஒப்பீடு
ரசாயன உரம் மூலம் புடலை

| விவரம் | செலவு | வரவு |
|---|---|---|
| மரத்தூண் பந்தல் | 30,000 | |
| தொழு உரம் | 8,000 | |
| விதை | 200 | |
| உழவு, நடவு, அறுவடை, குழி, களை எடுக்க கூலி | 20,000 | |
| உரங்கள், புண்ணாக்கு, பூச்சி மருந்துகள் | 15,000 | |
| போக்குவரத்து, சுங்கம், கமிஷன் | 25,000 | |
| 25 டன் காய் விற்ற வரவு | | 1,50,000 |
| மொத்தம் | 98,200 | 1,50,000 |
| வரவு | | 51,800 |

முதல் அறுவடையில் பந்தல் செலவு 30 ஆயிரம் ரூபாய் சேரும். அடுத்தடுத்த அறுவடையில் அந்தத் தொகை லாபக் கணக்கில் வரும் போது, 81,800 என்றாகிவிடும்.

குப்புசாமியின் இயற்கை முறையில் புடலை

| விவரம் | செலவு | வரவு |
|---|---|---|
| பந்தல் | 30,000 | |
| ஆறு மாத வேலையாள் கூலி | 12,000 | |
| சாணம் | 5,000 | |
| விதை | 200 | |
| போக்குவரத்து, சுங்கம், கமிஷன் | 25,000 | |
| 25 டன் காய் விற்ற வரவு | | 1,50,000 |
| மொத்தம் | 72,200 | 1,50,000 |
| வரவு | | 77,800 |

முதல் அறுவடையில் பந்தல் செலவு 30 ஆயிரமும் சேரும், அடுத்தடுத்த அறுவடையில் அது லாபக் கணக்கில் சேரும் போது, 1,07,800 ரூபாய் கிடைக்கும்.